**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**அ.வ.எண். 348/2020**

**நாள்– 02.02.2026**

பி.**வா.சா. 1 – திரு.நடராஜன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:

1) எனது மனைவியின் பெயர் சந்திரா, அவரின் அக்கா பெயர் மணி. மேற்படி மணியின் கணவர்தான் 9ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது மாமனார் கோவிந்தனின் மனைவி பெயர் தாயம்மாள் என்றால் சரிதான். தாயம்மாளின் தந்தை பெயர் தாசுபோயன் என்றால் சரிதான். தாசுபோயனின் தம்பியின் பெயர் கந்தபோயன் (எ) கந்தசாமி என்றால் சரிதான். கந்தபோயன் மகன்தான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். தாவா கோவிலுக்கும் அதற்கு எதிரே உள்ள கடகடப்பான் கோவிலுக்குமிடையே தென்வடலாக ஒரு ரோடு செல்கிறது என்றால் சரிதான். மேற்படி ரோட்டில் தாவா கோவிலில் இருந்து சென்றால் மேற்குப்புறமாக வீரமாத்தி கோவில் உள்ளது என்றால் சரிதான். அதிலிருந்து மேற்குப்புறமாக மற்றொரு வீரமாத்தி கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 2ம் வீரமாத்தி கோவிலில் இருந்து வடபுறமாக சென்றால் அரசு வேம்பு விநாயகர் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அரசு வேம்பு விநாயகர் கோவிலில் இருந்து வடபுறமாக சென்றால் புதுமாரியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான்.

2) மேற்படி புதுமாரியம்மன் கோவிலின் வடபுறமாக வாய்க்காலுக்கு தென்புறத்தில் வேலாத்தாள் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வேலாத்தாள் கோவிலைச் சுற்றி அந்தக் கோவிலுக்கு சம்பந்தப்பட்ட சிலர் குடியிருக்கிறார்கள் என்றால் யாரும் இல்லை. வேலாத்தாள் கோவிலுக்கு சம்பந்தப்பட்டவர்கள் வெளியூர் சென்றுவிட்டார்களா என்றால் தெரியாது, ஆனால் அங்கு குடியில்லை. புதுமாரியம்மன் கோவில் தொட்டிய நாயக்கருக்கு சொந்தமானது என்றால் சரிதான். 2ம் வீரமாத்தி கோவில் போயர் சமுதாயத்தினருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அரசு வேம்பு விநாயகர் கோவிலானது கவுண்டர் சமுதாயத்தினருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல, அது பொதுக்கோவிலாகும். எனது குலதெய்வக் கோவில் வையப்பமலை கோவிலாகும்.

3) அரசு வேம்பு விநாயகர் கோவிலானது பட்டா நிலத்தில் உள்ளது என்றால் சரியல்ல, பட்டா நிலத்தில் இல்லை. கடகடப்பான் கோவிலுக்கு வடபுறம் வாதிகள் கட்டிவரும் கோவில் மாரியம்மன் கோவிலா என்றால்

சரிதான். மேற்படி மாரியம்மன் கோவிலுக்கு பட்டா நிலத்தினை கிரையம் பெற்று கோவில் கட்டிவருகிறார்கள் என்றால் சரியல்ல, அது பட்டா நிலம் இல்லை. போயர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட வீரமாத்தி கோவில் பட்டா நிலத்தில் உள்ளது என்றால் இல்லை. 1ம் வீரமாத்தி கோவில் கவுண்டர் சமுதாயத்தினைச் சேர்ந்த வாதிகளின் மாமன் மற்றும் மைத்துனருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல, அது பொதுக் கோவிலாகும், அரசாங்க இடத்தில் உள்ளது.

4) 2ம் வீரமாத்தி கோவிலின் நிர்வாகத்தில் வாதிகள் தலையிட்டு நிர்வாகம் செய்யலாமா என்றால் இயலாது, அது போயர் சமுதாய பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டது. மேற்படி 2ம் வீரமாத்தி கோவிலின் பூசாரி 9ம் பிரதிவாதி எனது சகலை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆனது நான் கொடுத்த புகாரின் பேரில் கொடுக்கப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 சம்பந்தப்பட்ட புகார் என்னிடத்தில் இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக என்னிடம் வேறு ஆவணங்கள் இல்லை என்றாலும், இருந்திருந்தால் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல, எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். சட்டப்படி நான் எனது சார்பான ஆவணங்களை தற்போது தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும், தற்போது வேண்டும் என்றே தாக்கல் செய்யாமல் ஆவணங்களை வைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

5) பி.வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் எனது புகாரில் குறிப்பிடப்பட்டிருந்த விவரங்கள் என்றாலும், அதில் "...இதனைத் தடுத்து மோதல் ஏற்படா வண்ணம் கோவிலைப் பூட்டி சாவியை அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என புகார் மனு வரப்பெற்றுள்ளது." என்று காணப்படுகிறது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 24.02.2015 தேதியிட்ட வா.சா.ஆ.10 புகார்தான் நான் தாக்கல் செய்த புகார் என்றால் சரிதான். 27.02.2014 தேதியிட்ட வா.சா.ஆ.11 தான் நான் தாக்கல் செய்த புகார் என்றால் சரிதான். புதுமாரியம்மன் கோவிலில் ராஜேந்திரன் என்பவர் பட்டக்காரர் ஆவார், பரமசிவம், சின்னராசு, பச்சியப்பன், செல்வம் (இன்னொரு பட்டக்காரர்) என்றால் சரிதான். துரைசாமி என்பவர் மேற்படி புதுமாரியம்மன் கோவிலுக்கு சம்பந்தப்பட்டவர் என்றால் சரிதான். துரைசாமி முதலில் நிர்வாகம் பார்த்து வந்தார், தற்போது ராஜேந்திரன் பார்த்து வருகிறார் என்றால் அது அவர்களது சமுதாய கோவில், அதன் நிர்வாகம் குறித்து எனக்கு தெரியாது.

6) அரசு வேம்பு விநாயகர் கோவில் நிர்வாகம் யார் பார்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் அது பொதுகோவிலாகும். அரசு வேம்பு விநாயகர் கோவிலினை கவுண்டர் சமுதாயத்தினர் நிர்வாகித்து வருகிறார்கள் என்றால் அது தவறாகும். 1ம் வீரமாத்தி கோவிலினை கவுண்டர் சமுதாயத்தினர் நிர்வகித்து வருகிறார்கள் என்றால் அது தவறாகும். 2ம் வீரமாத்தி கோவிலினை போயர் சமுதாயத்தினர் நிர்வகித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 8 அடி உயரத்தில் கட்டிவரும் மாரியம்மன் கோவிலானது வாதி குடும்பத்தினர் அவர்கள் சமுதாயத்தினருக்காக கட்டிவருகிறார்கள் என்றால் சரிதான். வாதிகளின் பரம்பரையினர்களின் பெயர் எனக்குத் தெரியுமா என்றால் ரங்கனூர் கிராமத்தில் குடியிருப்பவர்களின் பெயர் மட்டும் தெரியும். வாதிகளின் மூதாதையர்களின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

7) வா.சா.ஆ.10ல் சின்னதுரை என்று நான் குறிப்பிட்டுள்ளது இவ்வழக்கின் 2ம் வாதி என்றால் சரிதான். 8 அடி உயரத்தில் கட்டிவரும் கோவிலின் கட்டுமானத்தினை தான் எனது பிரமாணப்பத்திரிக்கையில் தாவா சொத்தில் வாதிகள் மாற்றி கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் தாவா கோவிலின் வாசலில் எடுக்கப்பட்டது என்றாலும், அதில் கையை தூக்கி கொண்டு நிற்கும் நபர் 3ம் பிரதிவாதி என்றாலும் சரிதான். மேற்படி **புகைப்படம் வா.சா.ஆ.21 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் நீல வண்ணத்தில் கோடு போட்ட சட்டை அணிந்த நபர் 3ம் பிரதிவாதி என்றாலும் சரிதான். **புகைப்படம் வா.சா.ஆ.22 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.**

8) இவ்வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்தபோது பொங்கல் வைக்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படம் தான் வா.சா.ஆ.21 மற்றும் வா.சா.ஆ.22 என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.21 மற்றும் வா.சா.ஆ.22 எடுக்கப்பட்டபோது போயர் சமுதாயத்தினர் பொங்கல் வைத்து விநாயகர் கோவிலுக்குள் பொங்கலினை எடுத்துச் சென்றபிறகு எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் சரியல்ல, எங்கள் சமுதாயத்தினர் மட்டும் அல்லாமல் அனைத்து சமுதாயத்தினரும் பொங்கலினை எடுத்துச் சென்ற பின்பு எடுக்கப்பட்ட புகைப்படமாகும்.

9) வா.சா.ஆ.21 மற்றும் வா.சா.ஆ.22ல் 3ம் பிரதிவாதிக்கு அருகில் நிற்பவர்கள் அனைவரும் போயர் சமுதாயத்தினை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல, அனைத்து சமுதாயத்தினரும் உள்ளனர். வாசலிற்கு அருகில்

நிற்பவர்கள் போயர் சமுதாயத்தினர் என்றால் சரிதான். பொதுவாக மாசி மாதம் வளர்பிறையில் ஒவ்வொரு வருடமும் திருவிழா நடக்கும் என்றால் சரிதான். அது 9 நாட்கள் திருவிழா என்றாலும், 9ம் நாள் பொங்கல் வைக்கப்படும் என்றாலும் சரிதான். கடகடப்பான் கோவிலுக்கு கிழபுறமாக தாவா 2ம் அயிட்ட சொத்தில் பொங்கல் வைக்கப்பட்டு பின்னர் அது கோவிலுக்குள் எடுத்து வரப்படும் என்றால் சரியல்ல, கோவிலுக்கு தென்புறமாக வைக்கப்படும் என்று சாட்சியமளித்துவிட்டு பின்னிட்டு வடபுறம் என்று சாட்சி கூறுகிறார்.

10) M.ராமசாமி தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.349/2020 மற்றும் அதனை ஒட்டியுள்ள சொத்துக்களையும் தான் வடபுறம் உள்ள இடம் என்று நான் குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். தாவா கோவிலில் காவடி எடுக்கும்போது கலசம் கட்டுவதற்கு முன்பு கடகடப்பான் கோவிலுக்கு கிழபுறம் உள்ள காலியிடத்தில் காவடிகளை வைப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு காவடி வைப்பவர்கள் போயர் சமுதாயத்தினர், வாதி சமுதாயத்தினர் மற்றும் அனைத்து சமுதாயத்தினரும் வைப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு காவடி வைக்கையில் அருகிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து காவடியினைச் சுத்தம் செய்வார்கள் என்றால் சரிதான். பின்னிட்டு அனைத்து காவடிகளுக்கும் ஆசாரி வந்து கண் திறந்து வைப்பார் என்றால் சரிதான். கண் திறந்த பின்னிட்டு ஆசாரி முதலில் பூஜை செய்வார் என்றால் சரிதான். பின்னிட்டு பண்டாரம் அந்த காவடிகளுக்கு பூஜை செய்வார் என்றால் சரிதான். பூஜை செய்துவிட்டு பண்டாரம் விபூதி மற்றும் பிரசாதம் அனைவருக்கும் கொடுப்பார் என்றால் சரிதான்.

11) வேண்டுதல் வைத்து காவடி எடுப்பவர்களும் அப்போது காவடியினைக் கொண்டு வந்து வைப்பார்கள் என்றால் சரிதான். பண்டாரம் விபூதி மற்றும் பிரசாதம் கொடுத்த பின்னிட்டு அனைவரும் அவரவர் வீட்டிற்கு காவடிகளை எடுத்துச் சென்று தீர்த்தக் காவடியோ, சர்க்கரைக் காவடியோ, பன்னீர் காவடியோ, சந்தன காவடியோ, தேன் காவடியோ, இளநீர் காவடியோ எதனை வேண்டிக் கொண்டார்களோ அதனை கலசத்தில் வைத்து காவடியில் கட்டி அவரவர்கள் வீட்டில் பூஜை செய்வார்கள் என்றால் சரிதான். பின்னிட்டு மேற்படி காவடிகளை தாவா விநாயகர் கோவிலில் வைத்து பூஜை செய்து பழனிக்கு பாதயாத்திரை செல்வார்கள் என்றால் சரிதான். பாதயாத்திரை சென்று பழனியிலிருந்து பாதயாத்திரையாகவே தாவா கோவிலுக்கு வருவார்கள் என்றால் சரிதான்.

12) கவுண்டர் சமுதாயத்தினர் சங்கோதி, பண்டாரம், தாசன் ஆகியோர்களுக்கு அன்னதானம் படைத்து மரியாதை செய்வார்கள் என்றால் எனக்குத் தெரியாது. அதற்கு அமுது படைத்தல் என்று பெயர் என்றாலும் சரியல்ல, பொது மக்கள் அனைவரும்தான் செய்வார்கள். கவுண்டர் சமுதாயத்து பெண்கள் சங்கோதி, பண்டாரம், தாசன் ஆகியோர்களிடமிருந்து அவர்கள் உண்ட பின்பு மீதமுள்ள உணவினை மடிப்பிச்சையாக வாங்கி அவர்கள் உண்பார்கள் என்றால் சரியல்ல.

**(வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**